# அறந்தாங்கி நகராட்சி
## நகர்மன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

**2023–ம் ஆண்டு சுபகிருது வருடம் தை மாதம் 10–ம் தேதி 24.01.2023 செவ்வாய் கிழமை காலை11 .00 மணிக்கு நடைபெற உள்ள சாதாரண கூட்ட பொருள் விபரம்**

<table>
<tr>
<td>பொருள் எண்:1</td>
<td>அறந்தாங்கி நகராட்சி ஆணையர் அவர்களின் டிசம்பர்–2022 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:– பதிவு செய்யலாம்.</td>
<td>தீர்மான எண்:– 219<br>தீர்மானம்:– அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்:2</td>
<td>அறந்தாங்கி நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பை சேகரிக்கும் பணிகளை வெளிக்கொணர்வு வழங்குபவர்/ நிறுவனம்/ ஒப்பந்ததாரர் மூலம் மூன்று ஆண்டுகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை –28 அவர்களின் செயல்முறை ஆணை எண்: 35295/2022/EA2 , SWM –20 நாள்: 10.01.2023–ல் கீழ்காணும் விபரப்படி நிபந்தனைகளுடன் அனுமதி அளிக்கப்பட்டடுள்ளது.<br><br>
<table>
<tr><td>நகராட்சியின் பெயர்</td><td>1 நாளைக்கு உற்பத்தி ஆகும் மொத்த கழிவுகள் எடை</td><td>ஒப்பந்த நிறுவனம் மூலம் 1 டன் கழிவுகளை அப்புறப்படுத்திட நிர்ணயம் செய்யப்பட்ட தொகை</td><td>1 நாளைக்கு 11.99 டன் கழிவுகளை அப்புறப்படுத்திட ஆகும் மொத்த செலவு தொகை</td><td>1 வருடத்திற்கு கழிவுகளை அப்புறப்படுத்திட ஆகும் மொத்த செலவு தொகை</td><td>1 வருடத்திற்கு கழிவுகளை அப்புறப்படுத்தும் மொத்த தொகைக்கு உண்டான GST & LWF உள்ளிட்ட வரியினங்கள் தொகை</td><td>ஓராண்டுக்கு ஆகும் மொத்த செலவு தொகை</td></tr>
<tr><td>அறந்தாங்கி</td><td>11.99 மெ.டன்</td><td>ரூ. 5640.36</td><td>0.68 லட்சம்</td><td>248.20 லட்சம்</td><td>47.16 லட்சம்</td><td>295.36 லட்சம்</td></tr>
</table></td>
<td>தீர்மான எண்: 220<br><br>தீர்மானம்:– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

மேற்படி திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிக்கான செலவினத்தை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், நகராட்சி நிதி பற்றாக்குறை ஏற்படின் 15 வது மத்திய நிதிக்குழு மான்யத்தில் 15th CFC SWM Tied Grand –யை பயன்படுத்திக் கொள்ளவும். மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று ஓர் ஆண்டிற்கு பணி உத்தரவு வழங்கி அந்நிறுவனத்தின் செயல்திறன் (Performance Satisfaction) திருப்திகரமாக இருக்கும் பட்சத்தில் அடுத்த இரண்டாவது மற்றும் மூன்றாவது ஆண்டுகளுக்கு மன்ற அனுமதியுடன் ஒப்பந்த காலத்தை நீடித்து வழங்கவும், ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான நாளிதழ் விளம்பர செலவினத்தினை நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்காலம் (ந.க.எண்: 5475/2022/எச்1)

ஆ) நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை –28 அவர்களின் செயல்முறை ஆணை எண்:35295/2022/EA2 SWM–20 நாள்:10.01.2023–ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின் படியும், நிபந்தனைகளின்படியும் செயல்படுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்:3**

இந்நகராட்சியில் பொது நிதியின் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள 14.12.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் அவற்றின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு முடிவுக்கும்.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1. | அறந்தாங்கி நகராட்சி சாலைகளின் மழைநீர் தேங்கியுள்ள இடத்தில் Wet mix macadam கொண்டு சரிசெய்தல் | 4.86 | திரு.டிமெய்ஞானம் ஒப்பந்ததாரர் | 0.11% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.K.தேன்மொழி ஒப்பந்ததாரர் | 0.91% மதிப்பீட்டிற்கு அதிகம் |

**அலுவலகக் குறிப்பு.**

1. மன்றம் முடிவுசெய்யலாம்.

2.பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனத்திற்கு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்:– 221**

**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு 1,2 அனுமதிக்கப்பட்டது.

<table>
<tr><td><u>பொருள் எண்:4</u></td><td>அறந்தாங்கி நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் சாலை பதிவேடுகளில் தற்போது வார்டு மறுவரை செய்த பின்பு புதியதாக சாலை பதிவேடு வார்டு வாரியாக 27 எண்ணம் ஆட்டோகாடுமேப் A3 அளவில் தயாரித்து அவற்றை A0 அளவில் வரைந்து அதில் Unicode குறித்து மண்சாலைகளுக்கு வர்ணம் கெடுத்து தார்சாலைகள், சிமெண்ட் சாலைகள் மற்றும் பேவர் பிளாக் சாலைகளை தனிதனியாக வகைப்பாடு செய்து அறிக்கை 2எண்ணம் சமர்பிக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.40000/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u>: மன்றம் முடிவுசெய்யலாம்</td><td><u>தீர்மான எண்:– 222</u><br><u>தீர்மானம்:–</u> அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td><u>பொருள் எண்:5</u></td><td>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 4454/2022/இ2-4 நாள்.20.12.2022ன் படி தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கம் 2022-23-15- வது மத்திய நிதிக்குழு 2022-23 திட்டத்தின் கீழ் அறந்தாங்கி நகராட்சியில் நகர்ப்புற சுகாதார மற்றும் நல மையம் கட்டும் பணிக்கு ரூ.25.00 இலட்சத்திற்கு வரப்பெற்ற நிர்வாக அனுமதி மன்றத்தின் பார்வைக்கு.<br><br><u>அலுவலக குறிப்பு:</u><br>1. மன்றம் பதிவு செய்யலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதினை அனுமதிக்கலாம்.</td><td><u>தீர்மான எண்:– 223</u><br><u>தீர்மானம்:–</u> அலுவலக குறிப்பு 1,2 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td><u>பொருள் எண்:6</u></td><td>இந்நகராட்சியில் அலுவலக பணிக்கு தேவையான கணினி பிரிண்டர் உபகரணங்கள் வாங்கிட நகர்மன்ற தீர்மான எண் 22 நாள்.29.04.2022 படி ரு.10.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதில் கீழ்கண்ட பொருட்கள் வாங்க 06.01.2023 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மற்றும் அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br><br>
<table>
<tr><td rowspan="2">Sl. No.</td><td rowspan="2">Description of Item</td><td rowspan="2">Qty</td><td colspan="3">Rate Quoted by</td></tr>
<tr><td>MM Office Automation, Salem</td><td>Marvel computers & Electronics, Salem</td><td>Digital India Solutions, Salem</td></tr>
<tr><td>1</td><td>Cleaning Blade</td><td>1 No.</td><td>1991.00</td><td>2090.00</td><td>2195.00</td></tr>
<tr><td>2</td><td>Service Charge</td><td></td><td>1500.00</td><td>2000.00</td><td>2500.00</td></tr>
<tr><td colspan="3">GST 18%</td><td>628.00</td><td>736.00</td><td>845.00</td></tr>
<tr><td colspan="3">Total</td><td>4119.00</td><td>4826.00</td><td>5540.00</td></tr>
</table></td><td><u>தீர்மான எண்:– 224</u><br><u>தீர்மானம்:–</u> அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td><u>அலுவலக குறிப்பு</u>:<br>1. மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள MM Office Automation, Salem என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td><u>பொருள் எண்:7</u></td>
<td>அறந்தாங்கி நகராட்சி கலவை உரக்கிடங்கில் 100 kv மின்சக்தி கூடுதல் திறன் வழங்க கோரப்பட்டதன் அடிப்படையில் அந்த மின் திரனுக்கு தகுந்ததுபோல் பனால் போர்ட் மற்றம் செய்ய தேவையான மின்உபகரணங்கள் வாங்கி பொருத்த ஆகும் செலவீனம் தொகை ரு.45000/- மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u>:<br>1. மன்றம் ஏற்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.</td>
<td><u>தீர்மான எண்:– 225</u><br><u>தீர்மானம்:–</u> அலுவலக குறிப்பு 1,2 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td><u>பொருள் எண்:8</u></td>
<td>இந்நகராட்சியில் கலவை உரக்கிடங்கில் புதிய பானல் போர்ட் மாற்றி அமைக்க தேவையான மின் உபகரண பொருட்கள் வாங்க 11.01.2023 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மற்றும் அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>
<table>
<tr><th rowspan="2">Sl. No.</th><th rowspan="2">Description of Item</th><th colspan="3">Rate Quoted by</th></tr>
<tr><th>Royal Electricals, Aranthangi</th><th>Popular Electricals, Alangudi</th><th>Rahuman Electricals, Karaikkudi</th></tr>
<tr><td>1</td><td>Purchase of electrical items for panel board</td><td>40837.00</td><td>41750.00</td><td>44065.00</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u>:<br>1. மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Royal Electricals, Aranthangi என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.</td>
<td><u>தீர்மான எண்:– 226</u><br><u>தீர்மானம்:–</u> அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

**பொருள் எண்:9**

இந்நகராட்சியில் அலுவலக பணிக்கு தேவையான கணினி பிரிண்டர் உபகரணங்கள் வாங்கிட நகர்மன்ற தீர்மான எண் 22 நாள்.29.04.2022 படி ரு.10.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதில் கீழ்கண்ட பொருட்கள் வாங்க 06.01.2023 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மற்றும் அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| Sl. No. | Description of Item | Qty | Rate Quoted by | | |
|---|---|---|---|---|---|
| | | | Professional Computers, Neyveli | Sivajothi Traders, Neyveli | Best Computers, Neyveli |
| 1 | Dot-matrix printer 80 col 9 pin 510 C.P.S | 1 No. | 15650.00 | 16250.00 | 16700.00 |

**அலுவலக குறிப்பு**:

1. மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Professional Computers, Neyveli என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

**தீர்மான எண்:– 227**

**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்:10**

இந்நகராட்சியில் தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கம் 22-23 - 15வது நிதி மத்திய நிதிக்குழு 22-23 ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள 13.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் அவற்றின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு முடிவுக்கும்.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1. | அறந்தாங்கி நகராட்சியில் எல்.என்.புரம் நகர்ப்புற சுகாதார மற்றும் நலமையம் கட்டும் பணி | 25.00 | திரு.டிமெய்ஞானம் ஒப்பந்ததாரர் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.B.மோகன் ராஜ் ஒப்பந்ததாரர் | 0.56% மதிப்பீட்டிற்கு அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**. மன்றம் முடிவுசெய்யலாம்.

**தீர்மான எண்:– 228**

**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<table>
<tr>
<td><u>பொருள் எண்:11</u></td>
<td>அறந்தாங்கி நகராட்சி 15வது மத்திய நிதிக்குழு 21-22 திட்டத்தின் கீழ் எல்.என்.புரம் பிள்ளையார் கோவில் தெரு சன்னதி வயல் 4 ல் புதிய ஆழ்குழாய் கிணறு அமைக்க மும்முனை மின் இணைப்பு பெற மின்சார வாரியத்திற்கு தொகை செலுத்த வரப்பெற்ற பட்டியலின்படி ஆகும் செலவீன தொகை ரூ.60700/- மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு:</u> மன்றம் ஏற்கலாம்.</td>
<td><u>தீர்மான எண்:– 229</u><br><u>தீர்மானம்:–</u> அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td><u>பொருள் எண்:12</u></td>
<td>இந்நகராட்சியில் 22-23 ஆம் ஆண்டு பொது நிதி ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள 02.01.2023 அன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு முடிவுக்கும்.<br><br>
<table>
<tr><td>வ. எண்</td><td>பணியின் விபரம்</td><td></td><td>டி.மெய்ஞானம் ஒப்பந்நதாரர்</td><td>வீராகுமார்.என் வாசுகி பவர்ஸ், அறந்தாங்கி</td><td>எ.கிருஷ்ணமுர்த்தி நந்தா கன்ஸ்ட்ரக்சன் அறந்தாங்கி</td></tr>
<tr><td>1.</td><td>போக்கஸ் லைட்</td><td>10 நாட்கள் வாடகை</td><td>12000</td><td>15000</td><td>14000</td></tr>
<tr><td>2</td><td>தடுப்பு வேலி அமைக்க</td><td>40 கம்பு மரம்</td><td>3500</td><td>3600</td><td>3600</td></tr>
<tr><td colspan="3">மெத்தம்</td><td>15500</td><td>18600</td><td>17600</td></tr>
</table>
<br><u>அலுவலகக் குறிப்பு.</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.</td>
<td><u>தீர்மான எண்:– 230</u><br><u>தீர்மானம்:–</u> அலுவலக குறிப்பு 1,2 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td><u>பொருள் எண்:13</u></td>
<td>இந்நகராட்சியில் நகர்மன்ற தலைவருக்கு புதிய ஸ்கார்பியோ வாகனம் விநியோகம் செய்திட மன்ற தீர்மான எண்.195 நாள்.28.12.22 ல் ரூ.1682000/- க்கு அனுமதி வழங்கப்பட்டு, அதன்படி பணி உத்திரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் தற்போது மகேந்திர நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளியினை புதிய விலை வீகிதத்தில் கீழ்கண்டவாறு கூடுதல் செலவினம் வரப்பெற்றது.</td>
<td><u>தீர்மான எண்:– 231</u><br><u>தீர்மானம்:–</u> அலுவலக குறிப்பு 1,2 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>வ. எண்</td><td>பணியின் விபரம்</td><td>விலைப்புள்ளி விலைவிகிதம்</td><td>தற்போதைய பட்டியல் விலைவிகிதம்</td><td>விலைவிகிதம் (உயர்வு)</td></tr>
<tr><td>1.</td><td>எக்ஸ் ஷோரூம் விலை</td><td>1549000/-</td><td>1614200/-</td><td>65200/-</td></tr>
<tr><td>2</td><td>இன்சூரன்ஸ்</td><td>103052/-</td><td>106042/-</td><td>2990/-</td></tr>
<tr><td>3</td><td>Temp RTO</td><td>5500/-</td><td>5500/-</td><td>--</td></tr>
<tr><td>4</td><td>TSC Charge 1%</td><td>15490/-</td><td>16142/-</td><td>652/-</td></tr>
<tr><td></td><td></td><td>1673042/-</td><td>1741884/-</td><td>68842/-</td></tr>
</table>
<u>அலுவலகக் குறிப்பு</u>.<br>
1. அனுமதிக்கலாம்.<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று கூடுதல் செலவினம் ரூ.68842/- யை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td><u>பொருள் எண்:14</u></td>
<td>இந்நகராட்சியில் குடிநீர் விநியோகப் பணிகள் மேற்கொள்ள போதிய நிரந்தர பணியாளர் இல்லாத காரணத்தினால் குடிநீர் சீராக விநியோகம் செய்யும் பொருட்டு குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி வெளிக்கொணர்வு முறையில் 3 நபர்களும் மற்றும் நகரமைப்பு பிரிவிற்கு சங்கிலியாள் 1 நபரும் தேவைப்படுவதால் ஜனவரி மாதத்திற்கு பணி அமர்த்திக்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.49,146/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
<u>அலுவலக குறிப்பு</u> குடிநீர் வடிகால் நிதியிலிருந்து வழங்கலாம்.</td>
<td><u>தீர்மான எண்:– 232</u><br>
<u>தீர்மானம்:–</u> அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td><u>பொருள் எண்:15</u></td>
<td>அறந்தாங்கி நகராட்சி வார்டு எண் 1 முதல் 27 வார்டுகளில் சுற்றி திரியும் மாடுகளால் பொது மக்களின் போக்குவரத்துக்கு இடையூர் ஏற்பட்டு விபத்து ஏற்படுகிறது. எனவே நகரில் சுற்றிதிரியும் மாடுகளை அருகன்குளத்தின் அருகில் உள்ள சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தின் அருகில் உள்ள விளையாட்டு மைதானத்தில் மாடுகளை பிடித்து அடைக்க லைட் வசதியுடன் தடுப்பு கம்பு அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.7000/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
<u>அலுவலகக் குறிப்பு</u>.<br>
1. மன்றம் முடிவு செய்யலாம்.<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்</td>
<td><u>தீர்மான எண்:– 233</u><br>
<u>தீர்மானம்:–</u> அலுவலக குறிப்பு 1,2 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| **<u>பொருள் எண்:16</u>** | அறந்தாங்கி நகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள சங்கு பழுதாகிவிட்டதால் அதனை பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.2200/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மன்றம் முடிவுசெய்யலாம். | **<u>தீர்மான எண்:– 234</u>**<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| **<u>பொருள் எண்:17</u>** | அறந்தாங்கி நகராட்சி கலவை உரக்கிடங்கில் உள்ள கோபுர விளக்கு பழுதாகிவிட்டதால் அதனை பழுது நீக்கம் செய்ய தேவையான மின் உபகரணங்கள் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2800/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மன்றம் அனுமதிக்கலாம். | **<u>தீர்மான எண்:– 235</u>**<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/–இரா.ஆனந்த்
தலைவர்,
அறந்தாங்கி நகர்மன்றம்.